## அசத்தல் விளைச்சல் தரும் ஐந்து ரகங்கள்!

## 25.01.2013





பரந்து விரிந்த நெல் வயலில்… தங்கத் துகள்களைத் தூவியது போல் ஜொலிக்கின்றன நெற்கதிர்கள் சேலம் சென்னா, சிவப்புக் குருவிக்கார், சிவப்புக் கவுனி, வெள்ளை பொன்னி, மாப்பிள்ளைச் சம்பா என ஐந்து வகையான பாரம்பரிய நெற்பயிர்கள் அழகாக அணி வகுத்து… ஆளுயரத்திற்கு நிற்கின்றன. திருச்சி மாவட்டம், முசிறியில்தான் இந்தக் காட்சி! உரிமையாளர் சுப்ரமணியசிவா. பி.காம் பட்டதாரியான இவர், இயற்கை விவசாயத்தை தீவிரமாக மேற் கொண்டிருக்கும் அதே வேளையில்… கட்டுமானப் பொருட்கள் விற்பனை நிலையத்தையும் நடத்தி வருகிறார்.

நானும் ஒரு காலத்தில் ரசாயன விவசாயிதான். ஆனால், அதில் கிடைத்த கசப்பான அனுபவத்திற்குப் பிறகு, இயற்கைக்கு மாறி 6 வருடமாகிறது. உப்புத் தன்மை கலந்த களிமண் நிலமான இதில்… இந்த அளவிற்கு பயிர்கள் விளைவதைப் பார்த்து, எங்கள் பகுதி விவசாயிகள் ஆச்சரியப்பட்டு போகிறார்கள். பத்து நாளைக்கு மேல் தண்ணீர் இல்லாமல் இருந்தாலும் கூட, பயிர்கள் நன்றாக தாக்குப் பிடிக்கிறது. இதையெல்லாம் சாத்தியமாக்கியது இயற்கை விவசாயம்தான்!

ரசாயன விவசாயம் செய்து கொண்டிருக்கும்போது, அதிகபட்சம் 5 நாளுக்குதான் நிலத்தில் ஈரம் இருக்கும். மண்ணில் உப்புத் தன்மை வாய்ந்த ரசாயனம் படிவதால்… தண்ணீர் சீக்கிரத்திலேயே ஆவியாகிவிடும். வழக்கமாக கொடுக்கும் உரங்களுடன் உப்புத் தன்மையைக் குறைப்பதற்காக ஜிப்சம், ஜிங்சல்ஃபைடு என்று தொடர்ச்சியாக கொடுத்தும்கூட, எந்த மாற்றமும் ஏற்படாமல்தான் இருந்தது என்று தண்ணீரின் தேவையைக் குறைக்கும் பாரம்பரிய ரகங்களின் ரகசியம் சொன்னார் சுப்பிரமணிய சிவா.

**கண்கூடாக பலன் தெரிகிறது!**

இந்த பகுதியில் கருவண்டு தாக்குதல் அதிகம். கதிர் பிடித்து வரும் நேரத்தில், வேர்ப்பகுதியில் ஏராளமான கருவண்டுகள் சூழ்ந்து… பயிரை நாசம் செய்து விடும். கதிர்நாவாய், செஞ்சூரைப் பூச்சிகளாலும் பயிர்கள் பாதிக்கப்பட்டது. பலவிதமான பூச்சிக்கொல்லியைத் தெளித்தும்

கட்டுப்படவில்லை. செலவுதான் பல மடங்கு அதிகமாகி கொண்டே இருந்தது. இந்தச் சூழ்நிலையில் இயற்கை விவசாயத்திற்கு மாறியதுடன், பாரம்பரிய ரகங்களையும் சாகுபடி செய்ய ஆரம்பித்தேன். கண்கூடாக பல வகைகளிலும் பலன் கிடைத்ததால், நிறைந்த மனதுடன் இதை தொடர்ந்துகொண்டே இருக்கிறேன்.
குறைவான செலவு, சிக்கனமான தண்ணீரிலேயே பயிர்கள் செழிப்பாக இருக்கிறது. தண்ணீர் இல்லாத நாட்களிலும் கூட, பசுமை குறையாமலே இருக்கிறது. பறவைகள் அதிகமாக வருகிறது. குறிப்பாக, மயில்கள் வந்து, பயிரை சேதப்படுத்தாமல் இருப்பதற்காக, வயலைச் சுற்றி, பிளாஸ்டிக் டேப் கட்டியிருக்கிறேன். தன்னை பிடிப்பதற்கான வலை என்று நினைத்து, வெளியிலேயே நின்றுவிடுகிறது.

**கருக்காவை குறைத்த இயற்கை!**

எங்களிடம் 10 மாடுகள் இருக்கு. இதில் ஏதாவது 4 மாடுகள் எப்பவும் பால் கறக்கும். நாங்கள் கூட்டுக் குடும்பமாக இருப்பதனால், எங்க வீட்டுத் தேவைக்கே பாலை பயன்படுத்திக் கொள்வோம். பால், தயிர் என்று மிச்சப்பட்டால் வயலில் ஊற்றிவிடுவோம். சமையலுக்குப் பயன்படுத்திய எண்ணையையும் வயலில்தான் ஊற்றுவோம். இதெல்லாம் ஊற்றப்பட்ட இடங்களில் பயிர்களுடைய வளர்ச்சி கொஞ்சம் கூடுதலாகவே இருக்கு. மூன்று வருடத்திற்கு ஒரு முறை ... இந்த 6 ஏக்கருக்கும் ஒட்டுமொத்தமாக 60 டன் மாட்டு எரு போடுவோம். வருடத்திற்கு இரண்டுமுறை நெல் சாகுபடி செய்வோம். இதுமாதிரி இன்னும் பலவிதமான இயற்கை இடுபொருட்கள் கொடுப்பதனால், பயிருடைய வளர்ச்சி அபரிதமாக இருக்கு. அதிக எண்ணிக்கையில் தூர் வெடிக்கிறது. தண்டுப்பகுதி நல்ல திடகாத்திரமாகவும், நெல்மணிகள் நல்ல திரட்சியாகவும் இருக்கிறது. ரசாயன உரங்கள் பயன்படுத்தியப்பல்லாம்... எட்டு சதவிகிதத்திற்குமேல் கருக்கா இருக்கும். இப்போது, அது இரண்டு சதவிகிதமாக குறைந்து போனது என்றார்.

**ஏக்கருக்கு 41 ஆயிரம் ரூபாய்!**

இயற்கையில் விளைந்த நெல், நன்றாக கெட்டியாக இருக்கிறது. இரண்டு மூன்று வருடம் வைத்திருந்தும் கூட விதைநெல்லாக பயன்படுத்தலாம் முளைப்புத்திறன் குறையாமலே இருக்கிறது. மாடுகளும், இந்தக் வைக்கோலை விரும்பிச் சாப்பிடுகிறது. ஏக்கருக்கு சராசரியாக 25 (60 கிலோ) மூட்டை மகசூல் கிடைக்கிறது. இதை அப்படியே நெல்லாகவே விற்பனை செய்தால், லாபம் கிடைக்காது என்பதனால், அரிசியாக மாற்றித்தான் விற்பனை செய்கிறோம். 1,500 கிலோ நெல்லை அரைத்தால், 825 கிலோ அரிசி கிடைக்கிறது. ஒரு கிலோ.... குறைந்தபட்சம் 50 ரூபாய் என்று விற்பனை செய்வது மூலமாக, 41,250 ரூபாய் வருவாய் கிடைக்கும்.

எல்லா செலவும் போக, நிகர லாபமாக 20 ஆயிரம் ரூபாய் கையில் மிஞ்சும். இதனுடன் எங்க மாடுகளுக்கு சத்தான தவிடும் கிடைத்துவிடுகிறது. இந்த முறை ஒன்றரை ஏக்கரில் சேலம் சென்னா, தலா 2 ஏக்கரில் மாப்பிள்ளைச் சம்பா, வெள்ளை பொன்னி, தலா கால் ஏக்கரில் சிவப்புக் கவுனி, சிவப்புக் குருவிக்கார் ரக நெல்லுங்களை சாகுபடி செய்திருக்கிறேன். இது எல்லாவற்றிற்குமே நடவிலிருந்து ஏறக்குறைய 130 நாள் வயதாகிறது. 145 ம் நாள் அறுவடை செய்துவிடலாம். இப்பவே கதிர் முத்தி, கிட்டத்தட்ட எல்லா ரகங்களுமே அறுவடைக்குத் தயாராகிவிட்டது.

இன்னும் 10,15 நாட்களுக்குள்ளேயே ஒட்டுமொத்த அறுவடையும் முடிந்துவிடும் என்றவர், இந்த ரக நெற்பயிர்களின் சிறப்பு குணங்கள் குறித்து தனித்தனியாக விவரித்ததோடு... சாகுபடி அனுபவத்தையும் வழங்கினார்.
இயற்கை விவசாயத்தில் மாடுகளுக்குத் தேவையான வைக்கோல், தவிடு... எங்களுக்கும் நஞ்சில்லாத அரிசி கிடைப்பதுடன், ரசாயன விவசாயத்தைவிட கூடுதல் வருவாயும் கிடைக்கிறது. இதைவிட வேற என்ன வேண்டும் என்றார்.

**தொடர்புக்கு**

சுப்ரமணியசிவா, செல்போன் : 77081-57057

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.01.13** www.vikatan.com